## செய்திக் குறிப்பு

புதுச்சேரி மின்துறையானது, பேரிடரால் ஏற்படும் எந்த ஓர் அசாதாரண சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ள தயார்படுத்தி உள்ளது. பேரிடர்காலங்களில் அவசரகால வேலைகளை விரைந்து செயல்படுத்தும்பொருட்டு, தொழிற்நுட்ப பணியாளர்கள் சேதம் அடையக்கூடிய இடங்களில் பணியில் முழுநேரமும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது மழைக்காலங்களில் ஏற்படும் மின்தடையை உடனுக்குடன் அறியும் பொருட்டு ஒரு அவசரகால கட்டுப்பாட்டு அறை மின்துறை தலைமை அலுவலகத்தில் முழு நேரமும் இயங்கி வருகிறது. இதனை பொதுமக்கள் 0413-2339532 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண் 1800-425-1912 அல்லது 1912 என்ற எண்ணின் மூலமாகவோ மின்துறைக்கு தெரியப்படுத்தலாம்.

பொதுமக்கள், அறுந்து விழுந்த அல்லது சேதமான மின்கம்பிகளை பார்த்தால், அவற்றைத் தொடவேண்டாமென்றும், உடனே அருகில் உள்ள மின்துறை அலுவலகத்திலோ அல்லது மேற்கண்ட தொலைபேசி எண்களின் மூலமாகவோ மின்துறைக்கு தெரியபடுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மழைக் காலங்களில் மின் கசிவால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க, ஈஎல்சிபி(ELCB) எனப்படும் மின் கசிவுதடுப்பான்களை, வீடுகளில் உள்ள மெயின் ஸ்விட்ச் போர்டில் பொருத்தவேண்டி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இடி, மின்னல் இருக்கும்போது தொலைகாட்சி, கைபேசி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், ஈரமான இடங்களில் உள்ள சுவிட்சுகளை வெறும் கைகளினால் போடவேண்டாம் என்றும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேல்நிலை கம்பிகளுக்கு அருகில் உள்ள மரக்கிளைகளை அகற்ற மின்துறை அலுவலர்களை அணுக வேண்டும்.

மேலும், விவசாய நிலங்களில், எலி, காட்டு பன்றி உள்ளிட்ட காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க விளை நிலங்களைச் சுற்றி சிலர் மின்சார வேலிகளை அமைக்கின்றனர். இதில் சில நேரங்களில் மனிதர்களும் சிக்கி உயிரிழக்க நேரிடுகிறது. விவசாய நிலங்களில் மின் வேலி அமைப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கும், இழப்புகளுக்கும், அம்மின் நுகர்வோரே பொறுப்பாகும். மின் வேலி அமைப்பது கண்டறியப்பட்டால், மின் நுகர்வோரின் இணைப்பு துண்டிக்கப்படும் என மின்துறை தெரிவித்துக்கொள்கிறது.

SUPERINTENDING ENGINEER
-cum-HOD
Electricity Department
Puducherry